# மன்னார்குடி நகராட்சி

# 2018-2019 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

# ( 1.4.2018 முதல் 31.3.2019 முடிய)

## (1) அமைப்பும் ஆட்சியும்:

### அ) நகராட்சி வரலாறு

மன்னார்குடி நகராட்சி 13 வருவாய் கிராமங்களான 1) மன்னார்குடி2) இராமபுரம் 3) முதல் சேத்தி 4) கைலாசநாதர் கோவில் 5) பாமனி 6) கோபிரளயம் 7) நரசிம்மாசாமி 8) சேரன்குளம் 9) அசேஷம் 10) நெடுவாக்கோட்டை 11) மேலவாசல் 12) 8/1 செருமங்கலம் 13) 9/1 இனாம் ஆண்டி குளம் ஆகியவைகள் அடங்கியதாகும். மன்னார்குடி நகராட்சி 1866ல் துவக்கப்பட்டது. நகரின் மொத்த பரப்பளவு 11.55 சதுர கிலோ மீட்டர் ஆகும். மன்னார்குடி 167 மன்னார்குடி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதிக்குட்பட்டதாகும். 30 தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்டும் அமைந்துள்ளது. இந்நகர் திருவாரூர் மாவட்டத்திற்குட்பட்ட நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி தஞ்சாவூர் மண்டல நகராட்சிகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிது. **இந்நகராட்சி அரசாணை எண் 1023 ஆட்சித் துறை நாள் 01.11.1866 மூன்றாம் நிலை நகராட்சியாகவும் , அரசு உத்திரவு எண். 194 தல ஆட்சித் துறை நாள் 10.02.1970 இரண்டாம் நிலை நகராட்சியாகவும்** 5.10.78 ம் நாளிட்ட 1543 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசு ஆணைப்படி 5.10.78 முதல் முதல்நிலை நகராட்சியாகவும் அரசாணை எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 2.12.2008ன்படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் அருள்மிகு ஶ்ரீராஜகோபாலசாமி திருக்கோவில் அமைந்துள்ளது மிகவும் சிறப்பானது அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்லையில் யாதொரு மாறுதலும் இல்லை. மேலும் இந்நகராட்சி கட்டிடம் புதுப்பொலிவுடன் கட்டப்பட்டு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய நகர்மன்றக் கூட்ட அறையுடன் கூடிய பிரம்மாண்டமான முகப்பு கட்டிடம் அமையப்பெற்றது .

## ஆ) மக்கள் தொகை

2011ம் ஆண்டின் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மொத்த மக்கள்தொகை 66,997 ஆகும். இதில் ஆண்கள் 33,117 பெண்கள் 33,880 ஆக உள்ளார்கள். கடந்த 120 ஆண்டுகளின் மக்கள் தொகை விபரம் கீழ்கண்டவாறு இருந்துள்ளது.

**மக்கள் தொகை விபரம்:**

| வருடம் | ஆண்கள் | பெண்கள் | கூடுதல் |
|---|---|---|---|
| 1901 | 9961 | 10488 | 20449 |
| 1911 | 10556 | 10842 | 21398 |
| 1921 | 10808 | 10828 | 21636 |
| 1931 | 11339 | 11425 | 22764 |
| 1941 | 11577 | 11711 | 23288 |
| 1951 | 15072 | 14788 | 29860 |
| 1961 | 16761 | 16797 | 33558 |
| 1971 | 21700 | 21083 | 42783 |
| 1981 | 26491 | 25247 | 51738 |
| 1991 | 28771 | 27781 | 56552 |
| 2001 | 30564 | 30914 | 61478 |
| 2011 | 33117 | 33880 | 66997 |

## இ) மன்ற அமைப்பும் தோற்றமும்

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.ந.க.38112/96 நாள்.02.07.1996 ல் இந்நகராட்சி எல்லையை **33** வார்டுகளாகப் பிரித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணைஎண்.146 நாள்.24.10.2016ன்படி 01.04.2018 முதல் 31.03.2019 வரை திரு கோ.இளஙககோவன் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொறுப்பு) அவர்கள் தனி அலுவலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்.

ஈ. நிர்வாக அமைப்பு

திரு கோ.இளஙகோவன் நகராட்சி பொறியாளர் அவர்கள்1.4.2017முதல் 31.3.2018 ஆணையர் பொறுப்பினை கூடுதலாக வகித்தார்கள்.

திரு அ.லெட்சுமணன் ,மேலாளர் அவர்கள் 01.04.2018 முதல் 31.03.2019வரை மேலாளராகவும், திரு என் பாஸ்கர் அவர்கள் 01.04.2017 முதல்17.12.2017 வரை கணக்கராகவும், திருமதி எஸ்.சரஸ்வதி 18.12.2018 முதல் 31.03.2019 வரை கணக்காகவும், திரு ஆர். விஜயகுமார் 01.04.2018 முதல் 31.03.2019 வரை நகரமைப்பு ஆய்வராகவும், திரு ஜே.மாதவன் அவர்கள் 01.04.2017 முதல் 15.09.2017 வரையிலும், திருமதி வி.சித்ரா 08.11.2017 முதல் 31.03.2018 வரை உதவி பொறியாளராகவும் பணிபுரிந்துள்ளார்கள். பொது சுகாதாரப் பிரிவில் திரு கோ.இராஜேந்திரன் அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 வரையிலும் திரு சு.பிரபாகரன் அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 வரை பணிபுரிந்துள்ளனர்.

வருவாய் பிரிவில் திரு க.ஜோதி 01,04,2018 முதல் திருமதி க. ஜோதி 01.04.2018 முதல் 31.03.2019 வரையிலும் வருவாய் ஆய்வாராகவும் திருமதி வ.கோமதி 01.04.2018 முதல் 31.03.2019 வரை வருவாய் ஆய்வராக பணிபுரிந்துள்ளனர்.

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படியான பணியாளர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

| வ எண். | பணியிடம் | கிரேடு | அனுமதிக்கப் பட்டது | தற்பொழுது உள்ளது. | காலியிடப் பணி விபரம் |
|---|---|---|---|---|---|
| 1. | மேலாளர் | **சி** | **1** | 1 | **-** |
| 2. | கணக்கர் | **சி** | **1** | 1 | **-** |
| 3. | உதவியாளர் | **சி** | **2** | 1 | **1** |
| 4. | உதவியாளர் (சத்துணவுகணக்கர்) | | | 1 | |
| 5. | வருவாய் ஆய்வர் | **சி** | **2** | 2 | **-** |
| 6. | இளநிலை உதவியாளர் | **சி** | **11** | 7 | **4** |
| 7. | வருவாய் உதவியாளர் | **சி** | **10** | 8 | **2** |
| 8. | தட்டச்சர் | **சி** | **2** | 2 | **-** |
| 9. | பதிவறை எழுத்தர் | **டி** | **2** | 2 | **-** |
| 10. | அலுவலக உதவியாளர் | **டி** | **6** | 6 | **-** |
| 11. | உதவி கணினி தொகுப்பாளர் | **பி** | **1** | 1 | **-** |
| 12. | புள்ளியியல் கணினி தொகுப்பாளர் | **சி** | **1** | - | **1** |
| 13. | ஜீப் டிரைவர் | **டி** | 1 | - | **1** |
| 14. | நகரமைப்பு ஆய்வர் | **சி** | 1 | 1 | - |
| 15. | உதவி பட வரைவாளர் | **சி** | 1 | - | **1** |
| 16. | செயின் மேன் | **டி** | 1 | 1 | **-** |
| 17. | நகராட்சிப் பொறியாளர் நிலை–II | **பி** | 1 | 1 | **-** |
| 18. | உதவி பொறியாளர் | **சி** | 1 | 1 | **-** |
| 19. | புதைசாக்கடைத் திட்ட மேலாய்வர் | **சி** | 1 | 1 | **-** |
| 20. | பணி ஆய்வர் | **டி** | 1 | 1 | **-** |
| 21. | பூங்கா காவலர் | **டி** | 4 | 3 | **1** |
| 22. | மின்னாளர் நிலை–I | **சி** | 1 | - | **1** |
| 23. | மின்னாளர் நிலை–II | **சி** | 1 | 1 | **-** |
| 24 | பவுண்டன் கிளீனர் | **டி** | 4 | 3 | **-** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | ஓட்டுநர் (குடிநீர் லாரி) | **சி** | 1 | 1 | **-** |
| 26 | மின் கம்பியாளர் | **சி** | 3 | 1 | **2** |
| 27 | மின் கம்பி உதவியாளர் | **டி** | 3 | 2 | **1** |
| 28 | குடிநீர் தொட்டி காவலர் | **டி** | 5 | 3 | **2** |
| 29 | அலுவலக உதவியாளர் | **டி** | 1 | 0 | **1** |
| 30 | டேர்ன்கார்க் | **டி** | 1 | 1 | **-** |
| 31 | புதை சாக்கடை உதவியாளர் | **டி** | 2 | 2 | **-** |
| 32 | துப்புரவு ஆய்வர்கள் | **சி** | 6 | 2 | **4** |
| 33 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | **சி** | 7 | 5 | **2** |
| 34 | அலுவலக உதவியாளர் | **டி** | 2 | 1 | **1** |
| 35 | லாரி ஓட்டுநர் | **சி** | 4 | 4 | - |
| 36 | லாரி துலக்குநர் | **டி** | 1 | 1 | **-** |
| **37** | **துப்புரவுப் பணியாளர்கள்** | **டி** | **140** | **89** | **51** |
| 38 | பெண் மருத்துவ அலுவலர் | **பி** | 1 | -- | **1** |
| 39 | மகப்பேறு உதவியாளர் | **சி** | 5 | 3 | **1** |
| 40 | மகப்பேறு ஆயா | **டி** | 3 | 2 | **1** |

## <u>மேலாளுகை</u>

பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு ஆகிய பணியாளர்களுக்காக அறிக்கை ஆண்டில் செலவு ரூ 852.97 லட்சம் ஆகும். சென்ற ஆண்டில் ரூ 852.97 லட்சம் ஆகும். நகராட்சி அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

## **<u>கணினி</u>**

இந்நகராட்சியில் 1999-2000 முதல் ஒரு கணினி மையம் செயல்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் Urban Tree Information System மூலம் அனைத்துப்பிரிவு கணினிகளும் ( 20 கணினிகள் ) ஒன்றிணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2015 டிசம்பர் முதல் Centralised Web based (CWBS) Software மூலம் பொது மக்களுக்கு கீழ்கண்ட சேவைகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்சுட்டிய Centralised Web based

(CWBS) Software ஆனது தமிழகத்திலேயே முதன் முறையாக தஞ்சாவூர் மண்டலத்தில் தான் முழுமையாக செயல்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சொத்துவரி, தண்ணீர் கட்டணம், தொழில்வரி, வரியில்லா இனஙகள், பிறப்பு இறப்பு பதிவுகள் மற்றும் பிற சேவைகள் அனைத்தும் மேற்சுட்டிய ஒருஙகிணைப்பட்ட மின் பொருளால் இயக்கப்பட்டு வருகிறது. இதற்காக UPN Data Circuite ( Virtual Private Network) BSNL மூலம் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து வரி மற்றும் வரியில்லா இனங்கள் , பிறப்பு இறப்பு பதிவுகள் கட்டிட உரிம அனுமதி , நகராட்சி பணியாளர்கள் ஊதியம் மற்றும் இந்நகராட்சியின் நடவடிக்கைகள் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலர்களிடமிருந்து இந்நகராட்சிக்கு வரப்பெறும் தபால்களும் இந்நகராட்சியிலிருந்து பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு, கணக்கு பிரிவு, தட்டச்சுப் பிரிவு போன்ற அனைத்து துறைகளுக்கும் தனித்தனியே மின்னஞ்சல் பெறவும் / அனுப்பவும் உறுதி செய்யப்பட்டுள்ளதால் தலைமை அலுவலகர்களுக்கு உரிய அறிக்கை உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகிறது.

## 2. <u>மன்ற அமைப்பு</u> :–

அறிக்கை ஆண்டில் இந்நகர் மன்றக் கூட்டங்களை தனிஅலுவலகர் அவர்களால் 18 முறைகள் மன்ற கூட்டம் நடைபெற்றுள்ளது. அறிக்கை ஆண்டில் நடைபெற்றுள்ள கூட்டங்கள் மன்றம் நிறைவேற்றப்பட்ட பொருள்களின் விபரம் பின்வருமாறு:

| விபரம் | சாதாரணக் கூட்டம் | அவசரக் கூட்டம | சிறப்புக் கூட்டம் | மொத்த கூட்டம் | முடிவு செய்யப்பட்ட பொருள | ஒத்தி வைக்கப்பட்ட பொருள் |
|---|---|---|---|---|---|---|
| தனி அலுவலர் | 11 | 4 | இல்லை | 15 | 306 | இல்லை |

<u>ஒப்பந்தக்குழு</u> : –

அறிக்கை ஆண்டில் ஒப்பந்தக்குழுக் கூட்டம் ஏதும் நடைபெறவில்லை.

<u>வரி மேல்முறையீட்டுக் குழு</u>

அறிக்கை ஆண்டில் வரி மேல் முறையீட்டுக்குழுக்கூட்டம் ஏதும் நடைபெறவில்லை

<u>நியமனக்குழு</u>

அறிக்கை ஆண்டில் நியமனக்குழு கூட்டங்கள் எதுவும் கூட்டப்படவில்லை.

3. அம்மா உணவகம்

அரசாணை எண். 21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்துறை நாள் 11.02.2014 ன்படி மன்னார்குடி நகராட்சி பேருந்து நிலையம் அருகில் புதிதாக அம்மா உணவகம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் காணொலி மூலம் 24.05.2015 அன்று திறக்கப்பட்டு மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அம்மா உணவகத்தில் கீழ்கண்ட விபரப்படி விடுமுறையின்றி தினமும் உணவுகள் விநியோகம் செய்யப்படுகிறது.

வரவு விபரம்

| வ.எண். | உணவு விபரம் | விலை விகிதம் விபரம் ரூ. |
|---|---|---|
| 1. | இட்லி | 1 |
| 2. | சாம்பார் சாதம் | 5 |
| 3. | தயிர் சாதம் | 3 |

| | | |
|---|---|---|
| 1) | 1200 எண்ணிக்கை இட்லி | ரூ. 1200 /– |
| 2) | 300 எண்ணிக்கை சாம்பார் சாதம் | ரூ. 1500/– |
| 3) | 300 எண்ணிக்கை தயிர் சாதம் | ரூ. 900 /– |
| | கூடுதல் | ரூ. 3600 /– |

நாள் ஒன்றுக்கு ரூ. 3600 /– வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,11,600/– வரவாக உள்ளது. செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.2.50 லட்சம் செலவிடப்படுகிறது. மேற்படி கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடப்படுகிறது.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விருது

ஆண்டுதோறும் தமிழக அளவில் சிறப்பாக செயலாற்றிய ஒரு மாநகராட்சி மற்றும் மூன்று நகராட்சிகளை தேர்ந்தெடுத்து அவற்றிற்கு ‘‘மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விருது’’ வழஙகப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் அரசாணை எண். 122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (MA.IV) துறை நாள் 11.08.2015. 2014–2015 ஆம் ஆண்டுக்கு மன்னார்குடி நகராட்சியை மேற்படி விருதுக்கு தேர்வு செய்து 15.08.2015 அன்று சென்னை கோட்டை வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின கொண்டாட்ட விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விருது மற்றும் இரண்டாம் பரிசாக ரூ. 10,00,000 /– க்கான (ரூபாய் பத்து இலட்சம் மட்டும் ) ரொக்கப் பரிசும் வழஙகப்பட்டுள்ளது.

## 5. <u>சாலைவசதிகள்</u>

இந்நகரம் வழியாக தேசிய நெடுஞ்சாலைகள் ஒன்றும் இல்லை. இந்நகர எல்லைக்குள் செல்லும் நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம்: 13.650 கிலோ மீட்டர் ஆகும். இவற்றின் விபரம் பின்வருமாறு

1) பந்தலடியிலிருந்து கே.எஸ்.எஸ். புதுத்தெரு வரை
2) ருக்மணிபாளையம் சந்திப்பிலிருந்து கும்பகோணம் செல்லும் – வரை
3) கீழப்பாலம் சந்திப்பிலிருந்து திருத்துறைப்பூண்டி ரோடு வரை
4) கீழப்பாலம் சந்திப்பிலிருந்து முத்துபேட்டை செல்லும் சாலை வரை
5) மன்னை நகர் பைபாஸ் செல்லும் சாலை
6) காளவாய்கரையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் சாலை
7) ருக்மணிபாளையம் சாலையிலிருந்து மதுக்கூர் செல்லும் சாலை வரை
8) மகாமாரியம்மன் கோவில் தெரு (காந்திஜி ரோடு சந்திப்பிலிருந்து நகராட்சி அலுவலகம் வரை நீங்கலாக ) திருவாரூர் செல்லும் சாலை.

மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான சாலைகள் கீழ்க்கண்ட விபரப்படி பராமரிக்கப்பட்டு வருகிறது. மொத்த நீளம் 88.500 கி.மீட்டர் ஆகும்.

| வ. எ ண். | சாலைகள் விபரம் | சாலைகளின் நீளம் (கீ.மீட்டர்) | | | |
|---|---|---|---|---|---|
| | | 2015-2016 | 2016-2017 | **2017-2018** | **2018-2019** |
| 1. | சிமெண்ட் கான்கிரீட் | 14.260 | 14.260 | **15.15** | **15.15** |
| 2. | தார்சாலைகள் | 69.690 | 73.040 | **67.93** | **68.45** |
| 3. | ஜல்லி போட்ட சாலைகள் | 04.550 | 01.200 | **05.420** | **04.90** |
| 4. | சிகப்பு கப்பித்தளம் | -- | -- | **--** | **--** |
| 5. | மண் சாலைகள் | -- | -- | **--** | **--** |
| **மொத்தம்** | | 88.500 | 88.500 | 88.500 | **88.500** |

அனைத்து சாலைகளும் நிதி நிலைமையை அனுமதித்தவகையில் திருப்திகரமாக பராமரிக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் நகராட்சியால் நிர்வகிக்கப்படும் சாலைகளின் நீளம் 88.500 கி.மீட்டர் ஆகும்.

**3. பணிகள் விபரம்**

**அ) பொது மராமத்துப் பணிகள்**

கீழ்கண்ட விபரப்படி வேலைகள் அறிக்கை ஆண்டில் செய்யப்பட்டுள்ளன

| .வ. எண் | வேலையின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | பொது நிதி | 15 | 42.14 |
| 2 | குடிநீர் நிதி | 15 | 39.5 |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் | 4 | 67.32 |
| 4 | பாராளுமன்ற உறுப்பினர் நிதி | 0 | 0 |
| 5 | சட்டமன்ற உறுப்பினர் நிதி | 0 | 0 |
| **கூடுதல்** | | 34 | **148.96** |

**ஆ) தெரு விளக்குகள்**

இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் தெரு விளக்குகளின் விபரம் வருமாறு:

| விளக்கின் வகையும் எண்ணிக்கையும் | 31.03.2014 | 31.03.2015 | **31.03.2016** | 31.03.2017 |
|---|---|---|---|---|
| 1. சாதாரண விளக்குகள் | -- | -- | -- | -- |
| 2. குழல் விளக்குகள் | 2120 | 2120 | 2120 | 2328 |
| 3. சோடியம் விளக்குகள் | -- | -- | -- | -- |
| (i)சோடியம் விளக்குகள்(250 வாட்ஸ்) | 349 | 349 | 349 | 349 |
| (ii) சோடியம் விளக்குகள்( 150 வாட்ஸ்) | 228 | 228 | 228 | 240 |
| (iii) சோடியம் விளக்குகள் ( 70 வாட்ஸ்) | 12 | 12 | 12 | 0 |
| 4. மெட்டல் 400 வாட்ஸ் | -- | -- | -- | 35 |
| 5. ஹைமாஸ் லைட்(12) | 2(28) | 2(28) | 4(68) | 4(68) |
| 6. மினி ஹைமாஸ் லைட் | **-** | 1(6) | **10(60)** | **10(60)** |
| 7. LED | **-** | **-** | **175** | **2534** |
| **மொத்தம்** | **2711** | **2712** | **3041** | **3339** |

அறிக்கை ஆண்டில் தெரு விளக்குகள் 3339ம் நகராட்சி கட்டிடங்களில் 214 மின் விளக்குகளும் பராமரிக்கப்பட்டு வந்தன. அறிக்கை ஆண்டில் மின் விளக்கு கணக்கு செலவு ரூ.116,68 லட்சம் ஆகும். சென்ற ஆண்டில் விளக்குகள் கணக்கு தலைப்பில் ரூ.116,68லட்சம் ஆகும்.

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்புப்பணிகள் சபரி எலக்டிரிக்கல்ஸ், சென்னை என்கிற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது .

**(இ) <u>குடிநீர் விநியோகம்</u>**

இந்நகராட்சியில் உள்ள **11** மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் தினமும் பொதுமக்களுக்கு **6.05** MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியால் 10460 குடிநீர் குழாய் வீட்டிணைப்பும், 30 கைப்பம்புகளும், 235 பொது குடிநீர் குழாய்கள் மூலமாகவும், ஆழ்குழாய் கிணற்றுடன் கூடிய மின்னிசைப் பம்புகள் 83 இடங்களிலும் இயங்கி வருகிறது. நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர்த்திட்டப் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் மின் கட்டணமாக அறிக்கை ஆண்டில் ரூ லட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ 84.60 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(ஈ) <u>பாதாள சாக்கடைத் திட்டம்:</u>

இந்நகராட்சிக் கிழக்குப் பகுதியில் மட்டும் பாதாள சாக்கடைத் திட்டம் 1975ஆம் ஆண்டு முதல் 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு வார்டு எண். 10, 14, 15 களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட தெருக்களில் உள்ள வீடுகள் பயன்பெறுகின்றன.

1)தென்வடல் ஆறாம் தெரு 2) ஆஸ்பத்திரி ரோடு, 3)காசுக்கார செட்டித்தெரு 4) கீழ் மற்றும் மேல் செங்குந்தர் தெரு 5) சிங்காரவேலு தெரு 6) புதுத்தெரு 7) கீழ ஒத்தைத்தெரு மற்றும் மேல ஒத்தைத் தெரு 8) கீழ முதல் தெரு மற்றும் மேல முதல் தெரு 9) கீழ இரண்டாம் தெரு மற்றும் மேல இரண்டாம் தெரு 10) மூன்றாம் தெரு, 11)வ.ஊ.சி.ரோடு, 12) கீழ நான்காம் தெரு மற்றும் மேல நான்காம் தெரு 13) நடுவாணியத்தெரு.

இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் 1975 ல் ரூ.5,53,943-/ ஆகும். மேற்கண்ட தெருக்களில் உள்ள வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் தென்வடல் ஆறாம் தெருவில் உள்ள கழிவு நீரேற்று நிலையத்திற்கு குழாய்கள் மூலம் கழிவு நீர் மண் வடிகட்டும் கிணற்றுக்குச் சென்று அதன்பிறகு கழிவுநீர் சேகரிக்கும் கிணற்றில் நிரப்பப்பட்டு 7.5 குதிரை சக்தி வேகமுள்ள நீர்மூழ்கி மோட்டார் மூலம் 1.05 கி.மீட்டர் தொலைவில் உள்ள புல் பண்ணைக்கு குழாய்கள் மூலம் சென்றடைகிறது. இத்திட்டத்தின் கீழ் 726 வீடுகளுக்கு புதிய பாதாள சாக்கடை இணைப்புகள் கொடுக்க ஒவ்வொரு வீட்டிற்கும் பின்புறம் Syphon தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை அறிக்கை ஆண்டு முடிய 768 வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தினசரி சுமார் 3.20 லட்சம் லிட்டர் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. மேற்படி கழிவு நீரைப் பயன்படுத்தி கழிவுநீர் பண்ணையில் புல் வளர்க்கப்பட்டு வருகிறது.

நகர் மன்ற தீர்மான எண் 593 நாள் 27.2.2008 ல் இந்நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்து , பணியை தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்ய , ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை ரூ.62.07 கோடிக்கு தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பபட்டது. அரசாணை எண் ( ப ) 31 ந.நி.ம.கு.வ (நநிவ) துறை நாள் 25.01.2011 ன் படி மேற்கண்ட பணி கைவிடப்பட்டது.

மன்னார்குடி நகராட்சியில் புதிய பாதாள சாக்கடை திட்டம் UGSS செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் திட்டம் மதிப்பீடு ரூ. 96.25 கோடிக்கு தயார்

செய்யப்பட்டு மன்றத் தீர்மான எண். **31** நாள் **30.11.2011** யின்படி அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு அரசிடம் முழுமானியம் கோரி பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**7. ஆரம்பக்கல்வி மற்றும் கல்வி வசதிகள் :—**

நகராட்சியால் 3 நடுநிலைப்பள்ளிகளும் , 1 மேல்நிலைப்பள்ளியும், 4 ஆரம்ப பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. பள்ளிகள் அனைத்தும் 9.3.90 ன் நாளிட்ட கல்வித்துறை அரசு ஆணை எண்.347ன் படி 1.4.90 முதல் அரசினரால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கல்வி வரியின் மூலம் அறிக்கை ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ.44.27 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு கிடைத்த வருவாய் ரூ.40.65 லட்சம் ஆகும். இத்தலைப்பின் கீழ் அறிக்கை ஆண்டில் செலவினம் ரூ.50.65 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு செலவினம் ரூ. 127.68 லட்சம் ஆகும்.

**4(1) <u>புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்டம்</u>**

இத்திட்டம் 15.3.1982 முதல் அமுலுக்கு வரப்பட்டு இந்நகராட்சியில் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்நகராட்சியின் எட்டு பள்ளிகளிலும் சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. அறிக்கை ஆண்டில் 5 முதல் 9 வரை மற்றும் 10 முதல் 14 வரை குழந்தைகளுக்கு நகராட்சிப் பள்ளிகளில் வேலை நாட்களில் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது . இதில் 5 அமைப்பாளர்கள், 4 சமையலர்கள், 2 உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பணியாளர்களுக்கான ஊதியம், மையச் செலவு மற்றும் இதர செலவுகளுக்கானத் தொகை மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் உணவு அருந்துபவர்கள் 5+9 மற்றும் 10+14 ல் உணவு அருந்தியவர்கள் எண்ணிக்கை 797 ஆகும். சென்ற ஆண்டில் உணவருந்தியவர்கள் எண்ணிக்கை 797 ஆகும்.

**5. <u>பொது சுகாதாரம்</u>**

<u>(அ) பொது சுகாதார அமைப்பு பணியாளர்கள்</u>

பொது சுகாதார பிரிவில் 2 துப்புரவு ஆய்வர்களும் 6 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் அறிக்கை ஆண்டில் பணியாற்றினார்கள்.

<u>(ஆ) பிறப்பு விகிதமும் மற்றும் மகப்பேறு நிவாரணமும்</u>

அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த பிறப்புகள் 2660 ஆகும். இது 1000க்கு **38.01** ஆகும். முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 2981 இது 1000 க்கு 42.61 ஆகும். அறிக்கை ஆண்டில் இரண்டு துப்புரவு ஆய்வர்கள் பிறப்பு, இறப்பு பதிவுகள் பணி பார்த்தனர்.

இம்மன்றத்திற்குட்பட்ட மகப்பேறு மருத்துவமனையில் கீழ்கண்டுள்ள பணியாளர்கள் பணியாற்றினார்கள்.

<u>பணியாளர்கள் விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1) பெண் மருத்துவ அலுவலர் | – | 1 (காலியிடம்) |
| 2) மகப்பேறு உதவியாளர்கள் | – | 3 (காலியிடம் 2 ) |
| 3) ஆயாக்கள் | – | 2 (காலியிடம் 1 ) |
| 4) மருத்துவமனை அலுவலக உதவியாளர் | – | 1 (காலியிடம் ) |

அறிக்கை ஆண்டில் மகப்பேறு மருத்துவ அலுவலர், பணியிடம் காலியாக இருந்தது. அரசிடமிருந்து இதன் பராமரிப்புக்கான மானியம் ஏதும் அறிக்கை ஆண்டில் பெறப்படவில்லை. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், நகராட்சியின் மகப்பேறு நிலையம் புதிய கட்டிடத்தில் அறிக்கை ஆண்டில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மருத்துவ அலுவலர் ஒருவரும், மருந்தாளுநர் ஒருவரும் ஆய்வக உதவியாளர் ஒருவர், மகப்பேறு உதவியாளர் ஐவர் அலுவலக உதவியாளர் இருவரும் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு அரசு பொது சுகாதார துறையிலிருந்து ஊதியம் வழங்கப்படுகிறது. மேலும் கேன்சர், சர்க்கரைநோய் மற்றும் இரத்த அழுத்தம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான பணியில் ஒரு செவிலியர் பொது சுகாதார துறையின் கீழ் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிகிறார்.

<u>(இ) பிறப்பு விகிதம், கொள்ளை நோய்கள் மற்றும் இதர தொற்று நோய்களும்</u>

அறிக்கை ஆண்டில் பதிவான இறப்பு 437ஆகும். முந்தைய ஆண்டில் 528 ஆகும். இறப்பு விகிதம் 1000 க்கு **6.25** ஆகும். முந்தைய ஆண்டில் 7.57 ஆகும். நோய்கள் மூலம் ஏற்பட்ட இறப்பு விபரம் பின்வருமாறு:–

| வ. எண். | நோய் | சென்ற ஆண்டில் | அறிக்கை ஆண்டில் |
|---|---|---|---|
| 1. | காலரா | இல்லை | இல்லை |
| 2. | அம்மை | இல்லை | இல்லை |
| 3. | பிளேக் | இல்லை | இல்லை |
| 4. | மலேரியா | இல்லை | இல்லை |
| 5. | சீதபேதி | இல்லை | இல்லை |
| 6. | காய்ச்சல் | 3 | 2 |
| 7. | சுவாச நோய்கள் | 69 | 76 |
| 8. | பிற காரணங்கள் | 365 | 350 |

(ஈ) அறிக்கையாண்டில் பிறப்பு, இறப்பு விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 2018-2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த பிறப்புகள் | 1111 |
| 2018-2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த இறப்புகள் | 428 |
| 2018-2019 ஆம் ஆண்டில் மகப்பேறு உதவியாளர்களால் பார்க்கப்பட்டது | - |
| அரசு ஆரம்பசுகாதார நிலையத்தில்ஏற்பட்ட பிள்ளைபேறுகள் எண்ணிக்கை | 18 |
| தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட பிள்ளைபேறுகள் எண்ணிக்கை | 1093 |
| பதிவான ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பு | 0 |
| 2018-2019 ஆம் ஆண்டு காலரா, அம்மை, பிளேக், மலேரியா, சீதபேதி, வெறிநாய்க்கடி ஆகியவற்றால் இறந்தவர்கள் | இல்லை |
| அறுவை சிகிச்சை செய்து கொண்ட மொத்த தாய்மார்கள் | 463 |
| இலக்கு | 620 |
| ஐ.யு.டி.பொருத்திக் கொண்ட தாய்மார்கள் மொத்தம் | 763 |
| இலக்கு | 780 |

## (உ) தடுப்பு ஊசி திட்டம்

நகரில் போலியோ டிப்திரியா, கக்குவான் இருமல், ரனஜன்னி, தட்டம்மை காசநோய் ஆகிய நோய்களுக்கு தடுப்பு நடவடிக்கையாக ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தடுப்பூசி போடும் பணியினை மகப்பேறு நிலையம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்களால் செய்யப்பட்டது.

(உ –1) அறிக்கையாண்டில் தடுப்பு ஊசி போடப்பட்ட விபரம் : 2017-2018:

| | இலக்கு | சாதனை |
|---|---|---|
| பி.சி.ஜி. போடப்பட்டவர்கள் | 1205 | 1201 |
| டி.பி.டி.போடப்பட்டவர்கள் | 1205 | 1201 |
| போலியோ போடப்பட்டவர்கள் | 1205 | 1201 |
| தட்டம்மை போடப்பட்டவர்கள் | 1205 | 1201 |
| டிடி (5-6 வயது போடப்பட்டவர்கள்) | 1110 | 1111 |
| டி.டி (கர்ப்பிணி தாய்கள்) போடப்பட்டவர்கள் | 1260 | 1210 |
| டி.டி.(16–வயது ) போடப்பட்டவர்கள் | 1135 | 1132 |
| இரும்பு சத்து மாத்திரைகள் (பெரியது) | 126000 | 126000 |

(ஊ) குடும்ப நலத்திட்டம்:

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சிக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை குறியீடு 640 ஆகும். அதில் 463 தாய்மார்களுக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தகுதியுள்ள தம்பதியருக்கு நிரோத் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டது. ஐ.யு.டி.டி.க்கு நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கு 780 ஆகும். அதில் 763 அடையப்பட்டது.

(ஐ) துப்புரவு பணி:

தினந்தோறும் காலை, மாலை தெருக்கள் துப்புரவு பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. சேகரிக்கப்பட்ட குப்பைகள் நகராட்சி உரக்கிடங்கிற்கு மக்கும் உரம் தயாரிப்பதற்காக கொண்டு செல்லப்பட்டது. தவிர, சிறிய தெருக்களிலும், சந்துக்களிலும் உள்ள குப்பைகளை கைவண்டிகள் மூலமாக அருகாமையிலுள்ள தொட்டிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு பின் லாரி மூலம் அப்புறப்படுத்தப்பட்டு கலவை உரக்கிடங்கிற்கு எடுத்துக் கொண்டு செல்லப்பட்டன. பொது சுகாதார வேலைகளை கவனிக்க பொது சுகாதார பிரிவில் 83 துப்புரவு பணியாளர்களும் டிராக்டர் மற்றும் லாரி ஓட்டுநர்கள் நால்வரும் துலக்குநர் ஒருவரும், 5 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் பணியாற்றினர். கீழ்கண்ட வாகனங்கள் துப்புரவு பணிகளை பராமரிக்க உபயோகப்படுத்தப்பட்டன.

| | |
|---|---|
| **1.** டிப்பர் லாரி | 3 |
| **2** டிப்பர் டிராக்டர் | 1 |
| **3.** டம்பர் பிளேசர் | 2 |

| | |
|---|---|
| 4.காம்பாக்டர் | 1 |
| 5. மண்வாரும் இயந்திரம் | 1 |

(ஏ) கொசு ஒழிப்புத்திட்டம் :

நகராட்சி பகுதியை 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தினசரி ஒவ்வொரு வார்டாக தெருக்களில் சென்று கொசுப்புழு ஒழிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது. மேலும் ,தேசிய யானைக்கால் நோய் தடுப்பு திட்ட அலுவலரின் அறிவுரைப்படி கொசுப்புழு மருந்து ( BIO LARVICIDE) தெளிக்கப்பட்டு வருகிறது

(ஓ) தனியார் மூலம் துப்புரவுப்பணி

01.07.2015 முதல் துப்புரவு பணியாளர்கள் 96 நபர்கள் Outsourcing முறையில் பணியில் ஸ்ரீமாதா சோஷியல் டெவலப்பெண்ட் என்ற நிறுவனம் மூலம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மாதாந்திர தொகை ரூ. 6.85 இலட்சமாகும். வார்டுகள் 16, 17, 18, 19, 21, 22, 23, 24, 25, 28, 30, 31 ஆகிய வார்டுகள் தனியார் பணி செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பகுதியில் உள்ள அனைத்து மருத்துவமனைகள், காய்கனி மார்க்கெட், கோவில்கள், திரையரங்கு பகுதிகள் உள்ளடங்கிய சாலைகள், தெருக்கள் மற்றும் சந்து பகுதிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், அப்பகுதியில் உள்ள பொதுக் கழிவறைகளையும் இந்நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அப்பகுதியில் சேகரிக்கும் குப்பைகளையும் குப்பைத் தொட்டியில் சேகரிக்கும் குப்பைகளையும் அன்றாடம் காலையிலும் மாலையிலும் அப்புறப்படுத்தப்படுகிறது. மேற்காணும் பகுதியில் உள்ள குடியிருப்புகளில் வீடுவீடாகச் சென்று குப்பைகளை சேகரித்து உடனுக்குடன் அப்புறப்படுத்தப்படுகிறது. கழிவுநீர் ஓடும் வாய்க்கால் அனைத்தையும் சுத்தம் செய்யப்படுகிறது. மேற்படி தொண்டு நிறுவனப் பணியாளர்கள் தங்களுடைய சொந்த ஆட்களைக் கொண்டு நகராட்சி கலவை உரக்கிடங்கிற்கு கொண்டுபோய் சேர்க்கிறார்கள். பேருந்து நிலையம், கோவில் பகுதி மற்றும் நகரின் முக்கிய இடங்களில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதுடன் கிருமி நாசினியும் தெளிக்கப்பட்டுவருகிறது. இத்தொண்டு நிறுவனம் 89 கொண்டு கவனித்து வருகிறது. மேற்படி தனியார் தொண்டு நிறுவன சுகாதாரப்பணிகள் பொது மக்களிடையே நல்ல வரவேற்புடையதாக அமைந்துள்ளது. பேருந்து நிலையம் நகரின் முக்கியமான இடங்களில் இரவு நேர கூட்டும் பணியும் நடைபெறுகிறது

(ஓ) உரக்கிடங்கு: (Cantralised compost unit)

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு டிப்போ சாலையில் அமைந்துள்ளது. தற்பொழுது 3.65 ஏக்கர் மட்டுமே உள்ளதால் கூடுதலாக 6 ஏக்கர் நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசு மான்யமாக ரூ.6.00 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. உரக்கிடங்கிற்கு கூடுதல் இடம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுதுள்ள உரக்கிடங்கில் காவலர் அறை மற்றும் தண்ணீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. புல்பண்ணையில் கலவை உரக்கிடங்கிற்கு 4.20 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு உள்ளது. பணியாளர் குடியிருப்பு ஒன்றும் ஆழ்துளை கிணறு ஒன்றும் இரண்டு பிளாட்பார்ம்களும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் 1.64 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இவ்வாண்டில் கலவை உரக்கிடஙகினை எந்திரமயமாக்கும் பணி செய்யப்பட்டு வருகிறது.

(ஔ) பொதுநலமும், பாதுகாப்பும்

நகரில் ஒரு தீயணைப்பு நிலையம் தீயணைப்பு துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இது நகரிலும் மற்றும் சுற்றப்புற கிராமங்களிலும் விபத்துக்களை நல்லமுறையில் சமாளித்தது.

(ஃ) சுகாதார வளாகஙகள் :

இந்நகரில் 9 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் மகளிர் மற்றும் ஆடவர் சுய உதவி குழுக்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மற்றும் சமுதாய கழிப்பறைகள் 19 இடஙகளிலும் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கழிப்பிடஙகள் 5 இடஙகளிலும் நம்ம டாய்லெட் 2 இடஙகளிலும் உள்ளது.

6. வருவாய் இனங்கள்

(அ) அசையா சொத்துகளின் வருவாய்

நகராட்சி காமராஜ் பேரூந்து நிலைய சைக்கிள் ஸ்டாண்டு, பேருந்து நிலைய கடைகள் அசைவ மற்றும் சைவ உணவு விடுதிகள் மற்றும் இதர கடைகள், 10 பூக்கடைகளும், பங்கு ஸ்டால்கள் மற்றும் இதர கடைகள் முதலியவைகளிலிருந்து குத்தகை தொகையாக ரூ. 27,57,405/– வருமானம் கிடைத்தது. சென்ற ஆண்டில் ரூ. 30,74,760/– ஆகும். பேருந்து நிலையத்தில் தினசரி பேருந்து ஒன்றுக்கு ரூ.12/-வீதம் வசூல் செய்யப்பட்டது. இந்நகராட்சி பேருந்து நிலையம் பி வகுப்பு பேருந்து நிலையமாகும். சென்ற ஆண்டு பேருந்து கட்டணம் வசூல் மூலம் ரூ. 6,18,715/- வருமானம் கிடைத்தது. அறிக்கையாண்டில் பேரூந்து கட்டண வசூல் ரூ 5,01,000/- ஆகும்.

பேருந்து நிலையத்தில் கட்டண கழிவறைகள் மற்றும் குளியலறைகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியாக இருந்தது. நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பறைகள் கட்டணம் வசூலிக்கும் உரிமை,அறிக்கையாண்டில் ரூ 22,10,350/- வருமானம் கிடைக்கப்பெற்றது. சென்ற ஆண்டு ரூ. 14,60,550/- வருமானம் கிடைத்தது.

பேருந்து நிலையத்தில் வடக்கு பகுதியில் உள்ள வாடகை கார்கள் நிறுத்த இரண்டு ஷெட்டுகள் மூலம் அறிக்கை ஆண்டில் வருமானம் ரூ. 22,050/-ஆகும். சென்ற ஆண்டில் ரூ. 21,000/- ஆகும். மேலும் அரசு மருத்துவமனை கீழ்புறம் உள்ள வாடகை கார்கள் நிறுத்துமிடம் மூலம் அறிக்கை ஆண்டில் வருமானம் ரூ.7,335/- ஆகும் சென்ற ஆண்டில் ரூ.6,985/- ஆகும்.

நகராட்சியின் பராமரிப்பில் இருந்து வரும் மீன்பாசி குத்தகை குளங்கள் மூன்றாண்டு குத்தகை விடப்பட்டு சென்ற ஆண்டில் ரூ.**7,82,280/–**ஏல விடப்பட்ட குளங்களில் நீர் ஆதாரம் இல்லாததாலும், நீர் ஆதாரம் உள்ள குளங்களில் மீன்பாசி குத்தகைகள் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.**2,43,770/–**ஆகும்.

<u>(ஆ) நகராட்சி பேருந்து நிலைய தங்கும் விடுதிகள்</u>

மத்திய ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் பணிகள் கீழ் பேருந்து நிலைய உட்புறம் மத்தியில் வடபுறம் 6 மற்றும் தென்புறம் 6 தங்கும் அறைகளும், பேருந்து நிலைய வடபுறம் 6 தங்கும் அறைகளும் பேருந்து நிலைய எதிர்புறம் 12 தங்கும் அறைகளும், ஏற்கனவே உள்ள கடைகளில் முதல்தளம் கட்டப்பட்டு பொதுஏலம் மூலம் ரூ.3,26,400/- வருமானம் வரப்பெற்றது. சென்ற ஆண்டில் ரூ.3,10,855/- வருமானம் வரப்பெற்றது.

<u>(இ) தொழிற்சாலைகள்</u>

இந்நகர எல்லைக்குள் அறிக்கையாண்டில் தொழிற்சாலைகள் இல்லை.

<u>(ஈ) பூங்காக்களும் , தோட்டங்களும்</u>

நகரிலுள்ள பூங்காக்கள் அறிக்கையாண்டில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டன. அவை: 1)கல்கி பூங்கா 2) பி.ஆர்.எம்.பூங்கா 3) கீழப்பாலம் பூங்கா (கே.எஸ்.எஸ்.பூங்கா) 4) நேரு பூங்கா 5) அக்கரை நடராஜன் தெரு பூங்கா 6) மன்னை நாராயணசாமி நினைவு பூங்கா . இத்தலைப்பில் வருமானம் இல்லை.

<u>(உ) சந்தைகள்</u>

அறிக்கையாண்டில் சந்தை , மீன் மற்றும் காய்கறி நாளங்காடிகள், பேருந்து நிலையங்கள், ஆடு அடிக்கும் தொட்டி இவைகளிலிருந்து மூன்றாண்டுகளில் கிடைத்த வருமானத்தின் விபரம் கீழ்வருமாறு:–

| ஆண்டு | சந்தை | பேருந்து கட்டணம் | ஆடு அடிக்கும் தொட்டி | பலன்தரும் மரங்கள் ஏலம் |
|---|---|---|---|---|
| 2015 -2016 | 8,02,339 | 6,25,806 | 1,55,600 | 1,450 |
| 2016-2017 | 9,63,900 | 5,88,735 | 1,62,750 | 4,150 |
| 2017-2018 | 10,13,095 | 6,18,175 | 1,70,890 | 4,365 |

வாரசந்தை மற்றும் மார்க்கெட்டின் மூலம் அறிக்கை ஆண்டில் வருமானம் ரூ 10,13,095/- ஆகும். சென்ற ஆண்டு ரூ. 9,63,900/-ஆகும்.

அ) கீழராஜவீதி காந்திஜி காய்கறி அங்காடி மூலம் அறிக்கை ஆண்டில் வருமானம் ரூ 1,05,730/- ஆகும். சென்ற ஆண்டு ரூ. 1,00,695/-ஆகும்.

தாமரைக்குளம் வடகரையில் உள்ள மீன் அங்காடி மூலம் அறிக்கை ஆண்டில் வருமானம் ரூ 2,94,480/- ஆகும். சென்ற ஆண்டு ரூ.2,80,455/-ஆகும்.

**<u>7. நகரமைப்பு பிரிவு</u>**

அறிக்கை ஆண்டில் கட்டட உரிமையாணைகள் வழங்க கீழ்க்கண்ட விபரப்டி விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.

**(அ) <u>கட்டிட விண்ணப்பங்கள் விபரம்</u>**

| | | |
|---|---|---|
| கட்டிட விண்ணப்பங்கள் பெறப்பட்டது | – | 239 |
| i) அனுமதி அளிக்கப்பட்டவை | – | 232 |
| ii) அனுமதி மறுக்கப்பட்டவை | – | 7 |

இத்தலைப்பின்கீழ் கீழ்க்கண்ட விபரப்படி உரிமையாணைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

| கட்டிட உரிமம் தொகை ரூ. | அபிவிருத்தி கட்டணம் தொகை ரூ. | ஆக்கிரமிப்பு கட்டணம் தொகை ரூ. | மற்ற கட்டணம் தொகை ரூ. |
|---|---|---|---|
| **14,73,617/-** | **1,40,509/-** | **2,88,557/-** | **7,10,000/-** |

**2. முழுமைத் திட்டம்:**

மன்னார்குடி நகராட்சியில் முழுமை திட்டம் தயாரிக்கப்பட்டு 1989 முதல் நடைமுறையில் உள்ளது. மறு ஆய்வு முழுமைத்திட்டம் அரசாணை எண் : 272 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நாள் 29.11.2010 ல் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதைத்தவிர 7 விரிவு அபிவிருத்தி திட்டங்களும் மற்றும் இரண்டு நகரமைப்பு திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டு அதன்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மேலும் இந்நகராட்சி எல்லைக்குள் 50 அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் உள்ளன.

**3 . பணியாளர்கள்:**

நகரமைப்பு பிரிவில் தற்சமயம் **1** நகரமைப்பு ஆய்வாளர் **1** இளநிலை உதவியாளர் மற்றும் **1** செயின்மேன் ஆகிய பணியாளர்கள் உள்ளனர்.

**4. மனைப்பிரிவு**

அனுமதியற்ற மனை மற்றும் மனைப்பிரிவினைவரன்முறைபடுத்த G.O(M.S)No.78 H&UD Department நாள்.**04.05.2017** மற்றும் G.O(M.S)No.172 H&UD Department நாள் **13.10.2017**ன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மனைகள் வரன்முறை செய்யப்படுகிறது.

**8. வரியின வருவாய்**

**(அ) வரிவிதிப்பு விகிதம்:**

| வ.எண். | வரி இனம் | வரிவிதிப்பில் அரையாண்டு |
|---|---|---|
| 1 | பொது காரியங்களுக்கு | 2.75% |
| 2 | துப்புரவு | 2.75% |
| 3 | தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 7.00% |

| | | |
|---|---|---|
| 4 | தெருவிளக்கு | 1.50% |
| 5 | கல்வி வரி | 2.50% |
| | மொத்தம் | 16.50% |

**(ஆ) காலி நிலவரி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 87 (2) ன் படி**

| வ. எண் | இனம் | விகிதம் மதிப்பில் |
|---|---|---|
| 1 | பொது காரியங்களுக்காக வரிநிலக் கிரயம் | 1/4% |
| 2 | தண்ணீர், சாக்கடை, வரிநிலக்கிரயம் மதிப்பீடு | 1/4% |
| 3 | விளக்கு வரி, நிலக்கிரயம் மதிப்பில் | 1/16% |
| 4 | கக்கூஸ் வரி | 1/16% |
| 5 | கல்வி வரி | 1/16% |
| | மொத்தம் | 11/16% |

**(இ) வரியினங்கள் கேட்பு ,வசூல் , நிலுவை விவரம் :–**

| ஆண்டு | சொத்து வரி | தொழில்வரி | கூடுதல் |
|---|---|---|---|
| 2015-2016 | | | |
| கேட்பு | 328.52 | 80.87 | 409.39 |
| வசூல் | 265.82 | 31.28 | 297.10 |
| நிலுவை | 62.07 | 49.59 | 111.66 |
| வசூல் சதவீதம் | 81% | 39% | 73% |
| 2016-2017 | | | |
| கேட்பு | 355.77 | 88.80 | 444.57 |
| வசூல் | 289.87 | 32.58 | 322.45 |
| நிலுவை | 67.17 | 56.21 | 122.38 |
| வசூல் சதவீதம் | 81% | 20% | 72% |
| 2017-2018 | | | |
| கேட்பு | 399.07 | 94.67 | 493.74 |
| வசூல் | 277.86 | 31.41 | 309.35 |

| | | | |
|---|---|---|---|
| நிலுவை | 121.21 | 63.18 | 184.39 |
| வசூல் சதவீதம் | 69% | 33% | 63% |

**(ஈ) வரியில்லா இனம் 2018-2019 :–**

| ஆண்டு | குடிநீர் கட்டணம் | குத்தகை இனம் | அச்ச அருவருப்பு கட்டணம் |
|---|---|---|---|
| 2015-2016 | | | |
| கேட்பு | 80,61 | 110.27 | 3.33 |
| வசூல் | 49.46 | 94.87 | 3.33 |
| நிலுவை | 31.15 | 15.40 | - |
| வசூல் சதவீதம் | % | % | % |
| 2016-2017 | | | |
| கேட்பு | 87.60 | 113.84 | 2.90 |
| வசூல் | 56.03 | 99.76 | 2.90 |
| நிலுவை | 31.57 | 14.08 | - |
| வசூல் சதவீதம் | % | % | % |
| 2017-2018 | | | |
| கேட்பு | 92.38 | 111.82 | 2.82 |
| வசூல் | 49.58 | 89.33 | 2.82 |
| நிலுவை | 42.86 | 22.48 | - |
| வசூல் சதவீதம் | % | % | % |

## (9) அரசு மான்யங்கள் பெறப்பட்ட விபரம் :–

| வ. எண் | விபரம் | 2014-2015 | 2015-2016 | 2016-2017 | 2017-2018 |
|---|---|---|---|---|---|
| 1 | 13–வது நிதிக்குழு திட்டம் | 93,10,666 | -- | 3,07,33,865 | 1,50,00,000 |
| 2 | மீன்வளத்துறை மான்யம் | -- | -- | 50,69,520 | |
| 3 | ராஜ்ய சபா உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | -- | -- | 24,96,750 | 6,00,000 |
| 4 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 8,10,000 | -- | 6,00,000 | 26,00,000 |
| 5 | சுவர்ண ஜெயந்தி | 2,01,517 | -- | -- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரோஜாகார் யோஜனா | | | | |
| 6 | வெள்ள நிவாரணத் தொகை | -- | 50.00 ,000 | -- | |
| 7 | NULM | -- | -- | 1,24,170 | -- |
| 8 | வறட்சி நிவாரணம் | -- | -- | -- | -- |
| 9 | திடக்கழிவு மேலாண்மை | -- | 1.50 ,000 | -- | |
| 10 | சிறப்பு சாலைகள் | -- | -- | 1,50,00,000 | |
| 11 | திறந்த வெளியில் மலம் கழித்தல் – தவிர்க்கும் திட்ட மான்யம் | -- | -- | -- | -- |
| 12 | அடிப்படை கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் (O&M Gap Filling Fund ) | - | -- | -- | -- |
| 13 | ஐ.யு.டி.எம் திட்ட மான்யம் | 1,07,50,000 | 1,07,50,000 | 24,99,942 | -- |
| 14. | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்யம் | -- | -- | -- | -- |
| 15. | மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் | 10,00,000 | 10,00,000 | -- | -- |
| 16. | சமுதாய கழிப்பிடம் | -- | 45.00 ,000 | -- | -- |
| 17. | SBM - SWM | -- | -- | -- | 1,39,27,000 |
| 18. | UPHC patiemt Welfare Society | -- | -- | 5.00.000 | -- |
| 19. | N.P.R. Fund | -- | -- | 3.34.500 | -- |
| 20. | Funeral Rights | -- | -- | 20.000 | -- |

**(10) அறிக்கை ஆண்டு 2018-2019**

| வ.எண் | நிதி தலைப்பு | வரவு ( இலட்சத்தில்) | செலவு ( இலட்சத்தில்) | முடிவிருப்பு ( இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் நிதி | 319.21 | 1019.39 | 141.53 |
| 2 | குடிநீர் வடிகால் நிதி | 300.75 | 226.66 | 9.13 |
| 3 | கல்வி நிதி | 71.6 | 15.5 | 5.15 |

**(11) கடன்கள் செலுத்திய விபரம்**

| வ.எண் | விவரம் | அசல் | வட்டி | கூடுதல் |
|---|---|---|---|---|
| 1. | சிறப்பு சாலை திட்டம் I | 7,07,448 | 11,07,304 | 22,66,440 |

**(12) தணிக்கை விபரங்கள் 2018-2019:-**

| **வ.எண்.** | **விபரம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | ஆண்டு துவக்கத்திலுள்ள ஆட்சேபணைகள் | 373 |
| 2 | அறிக்கையாண்டில் வந்துள்ள ஆட்சேபணைகள் | 126 |
| 3 | கூடுதல் | 699 |
| 4 | அறிக்கையாண்டில் நீக்கம் செய்யப்பட்ட ஆட்சேபணைகள் | 326 |
| 5 | அறிக்கையாண்டில் நிலுவையாக உள்ள ஆட்சேபணைகள் | 373 |

இந்நகராட்சியின் சாதாரண கணக்கில் எல்லா தலைப்பிலும் அறிக்கை ஆண்டில் வருவாய் ரூ. /- ஆகும். செலவினம் ரூ. /- ஆகும்

**(13) வரிவசூல்**

வரிவசூலில் அறிக்கை ஆண்டில் நடப்பு சொத்துவரி இனத்தில் 83.85 சதவிகிதமும், நடப்பு வரியில்லாத இனத்தில் 89.50 சதவிகிதமும், நடப்பு தொழில்வரி இனத்தில் 76.90 ம் வசூலிக்கப்பட்டுள்ளது.மொத்த வரி வசூலில் **80.69** சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது**.**

**(15) பொதுக்குறிப்பு**

அறிக்கையாண்டுகளுக்கான காலத்தில் ஆணையர் மற்றும் துறை தலைவர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் இடையே சுமுகமான தொடர்பு இருந்துள்ளது. இந்நகராட்சியால் திட்டப் பணிகள் அடிப்படை சுகாதாரப் பணிகள், குடிநீர் மற்றும் நிர்வாக பணிகள் ஆகிய பணிகள் திருப்திகரமான வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிர்வாகம் இயல்பாக நடந்திட ஒத்துழைப்புத் தந்த அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்**.**

இடம்: மன்னார்குடி. ஆணையர்
நாள் :– மன்னார்குடி நகராட்சி

## அ) நகராட்சி வரலாறு

மன்னார்குடி நகராட்சி **13** வருவாய் கிராமங்களான **1)** மன்னார்குடி**2)** இராமபுரம் **3)** முதல் சேத்தி **4)** கைலாசநாதர் கோவில் **5)** பாமனி **6)** கோபிரளயம் **7)** நரசிம்மாசாமி **8)** சேரன்குளம் **9)** அசேஷம் **10)** நெடுவாக்கோட்டை **11)** மேலவாசல் **12) 8/1** செருமங்கலம் **13) 9/1** இனாம் ஆண்டி குளம் ஆகியவைகள் அடங்கியதாகும். மன்னார்குடி நகராட்சி 1866ல் துவக்கப்பட்டது. நகரின் மொத்த பரப்பளவு 11.55 சதுர கிலோ மீட்டர் ஆகும். மன்னார்குடி **167** மன்னார்குடி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதிக்குட்பட்டதாகும். 30 தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்டும் அமைந்துள்ளது. இந்நகர் திருவாரூர் மாவட்டத்திற்குட்பட்ட நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி தஞ்சாவூர் மண்டல நகராட்சிகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிது. **இந்நகராட்சி அரசாணை எண் 1023 ஆட்சித் துறை நாள் 01.11.1866 மூன்றாம் நிலை நகராட்சியாகவும் , அரசு உத்திரவு எண். 194 தல ஆட்சித் துறை நாள் 10.02.1970 இரண்டாம் நிலை நகராட்சியாகவும் 5**.10.78 ம் நாளிட்ட 1543 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசு ஆணைப்படி 5.10.78 முதல் முதல்நிலை நகராட்சியாகவும் அரசாணை எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 2.12.2008ன்படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் அருள்மிகு ஸ்ரீராஜகோபாலசாமி திருக்கோவில் அமைந்துள்ளது மிகவும் சிறப்பானது அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்லையில் யாதொரு மாறுதலும் இல்லை. மேலும் இந்நகராட்சி கட்டிடம் புதுப்பொலிவுடன் கட்டப்பட்டு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய நகர்மன்றக் கூட்ட அறையுடன் கூடிய பிரம்மாண்டமான முகப்பு கட்டிடம் அமையப்பெற்றது .

**அம்மா உணவகம்**

அரசாணை எண். 21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்துறை நாள் 11.02.2014 ன்படி மன்னார்குடி நகராட்சி பேருந்து நிலையம் அருகில் புதிதாக அம்மா உணவகம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் காணொலி மூலம் 24.05.2015 அன்று திறக்கப்பட்டு மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அம்மா உணவகத்தில் கீழ்கண்ட விபரப்படி விடுமுறையின்றி தினமும் உணவுகள் விநியோகம் செய்யப்படுகிறது.
வரவு விபரம்

| வ.எண். | உணவு விபரம் | விலை விகிதம் விபரம் ரூ. |
|---|---|---|
| 1. | இட்லி | 1 |
| 2. | சாம்பார் சாதம் | 5 |
| 3. | தயிர் சாதம் | 3 |

| | | |
|---|---|---|
| 1) | 1200 எண்ணிக்கை இட்லி | ரூ. 1200 /– |
| 2) | 300 எண்ணிக்கை சாம்பார் சாதம் | ரூ. 1500/– |
| 3) | 300 எண்ணிக்கை தயிர் சாதம் | ரூ. 900 /– |
| | கூடுதல் | ரூ. 3600 /– |

நாள் ஒன்றுக்கு ரூ. 3600 /– வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,11,600/– வரவாக உள்ளது.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விருது

ஆண்டுதோறும் தமிழக அளவில் சிறப்பாக செயலாற்றிய ஒரு மாநகராட்சி மற்றும் மூன்று நகராட்சிகளை தேர்ந்தெடுத்து அவற்றிற்கு ‘‘**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விருது**’’ வழஙகப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் அரசாணை எண். 122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (MA.IV) துறை நாள் 11.08.2015. 2014–2015 ஆம் ஆண்டுக்கு மன்னார்குடி நகராட்சியை மேற்படி விருதுக்கு தேர்வு செய்து 15.08.2015 அன்று சென்னை கோட்டை வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின கொண்டாட்ட விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விருது மற்றும் இரண்டாம் பரிசாக ரூ. 10,00,000 /– க்கான (ரூபாய் பத்து இலட்சம் மட்டும் ) ரொக்கப் பரிசும் வழஙகப்பட்டுள்ளது.